ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,993—1962 මාර්තු 23 වැනි සිකුරාදා—1962.3.23

12,993 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு மாச்சு மாதம் 23 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் | — | விலைக்கட்டளைகள் | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் | — | வரவு செலவுத் திரட்டுக்கள் | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 156 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அறிவித்தல்கள் | 155 | " மதுவரிச்சட்ட " அறிவித்தல்கள் | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

இல : 33/5/10/விசி.

### மலேரியா நோயை முற்றாக ஒழிப்பதற்காக உலகம் முழுதும் எடுக்கப்பட்ட முயற்சியை நினைவு கூர்வதற்கான விசேட முத்திரை வெளியீடு

மலேரியா நோயை முற்றாக ஒழிப்பதற்காக உலகம் பூராவும் எடுக்கப்பட்ட முயற்சியை நினைவு கூர்வதற்காக 1962 ம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 7 ம் திகதியன்று விசேட 25 சத முத்திரைகள் வெளியிடப்படுமென்று இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. இந்த முத்திரைகள் 1962 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ம் திகதி வரை அல்லது கையிருப்பு முடியும் வரை, இவற்றில் எது முந்தியதோ அந்தத் தினம் வரை விற்பனையிலிருக்கும். இம்முத்திரைகள் விற்பனையில் இருக்கும் காலத்தில் தற்போது இதே விலையிலுள்ள முத்திரைத் தொடர்களின் விற்பனை நிறுத்தப்படும்.

2. இம் முத்திரையில், உலகச் சுகாதார ஸ்தாபனத்தினுல் இச்சம்பவத்தை நினைவுகூர்வதற்காக ஏற்படுத்தப்பட்ட சின்னத்தினின்று எடுக்கப்பட்ட வடிவு அமைப்பு பொறிக்கப்பட்டுள்ளது.

பீலிக்சு ஆர். டி. பண்டாரநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு, கொழும்பு 1,
1962 ம் ஆடு மார்ச் மீ 12 ந் வ.

3-552.

### சம்பளச் சபைச் சட்டம்

அறிவித்தல்

இயந்திரத் தொழிற் சம்பளச் சபையில் முதலாளிகளின் பிரதிநிதியாக விருக்கும் திரு. ஈ. ஜே. வென்ஹம் என்பவர் இத்தீவில் இல்லாத காலத்து அவருக்குப் பதிலாகக் கடமையாற்ற (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம் கனம் தொழில் தேசீயமய சேவை மந்திரியால் நியமிக்கப்பட்ட திரு. எச். தோமஸ் என்பவர் திரு. வென்ஹம் இத்தீவிற்கு மீண்ட காலந்தொட்டு குறித்த சம்பளச் சபையின் அங்கத்தவராகக் கடமையாற்றத் தொடங்கியமையால், அவ்வாறு கடமையாற்றுவதினின்றும் அகல்வாராயினர்.

சா. ப. குமாரசிங்க,
தொழில் தேசீயமய சேவை அமைச்சின் மேலதிக நிரந்தரக்காரியதரிசி.

கொழும்பு,
1962 ம் ஆடு மார்ச்சு மீ 14 ந் வ.

3-550.

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

## சம்பளச்சபைச் சட்டம்—அறிவித்தல்

தென்னை வளர்புத் தொழிற் சம்பளச் சபையில் தொழிலாளரின் பிரதிநிதியாக இருந்த திரு. எஸ். சில்மன் ஹேவா தாமாக விலகியதால், அவருக்குப் பதிலாக அங்கம் வகிக்க திரு. டீ. டீ. செனிவரத்ன, என்பவரை (136–ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9–ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில் தேசியமய சேவை மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943–ம் ஆண்டின் சம்பளச் சபை விதிகளின் 26–ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சா. ப. குமாரசிங்க,
தொழில் தேசியமய சேவை மந்திரி
காரியாலய பதில் நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1962–ம் ஆண்டு மார்ச் மாதம் 16–ந் தேதி.

3–642.

---

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உட்பிரிவினால் என்னால் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள கட்டளை என்னால் அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு மார்ச் மீ 14 ந உ.

ரி. பி. இலங்கரத்ன,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் போக்குவரத்து அமைச்சர்.

அட்டவணை

| கட்டளையிட்ட திகதி | கட்டளையிடுவதற்கு யாரால் அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்குச் சேர்மதியானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 7.10.61 | .. உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) மாத்தறை வட்டாரம் | ஆட்டிறைச்சியும், மாட்டிறைச்சியும் | 13.10.61 ம் திகதியைக் கொண்ட 12,720 ம் இலக்கம் |
| 3.2.62 | .. விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) .. | மீன் கருவாடும் இறால் சருவாடும் | 3.2.62 ம் திகதியைக் கொண்ட 12,895 ம் இலக்கம் |

3–545.

---

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உட்பிரிவினால் என்னால் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள கட்டளை என்னால் அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு மார்ச் மீ 14 ந உ.

ரி. பி. இலங்கரத்ன,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்போக்குவரத்து அமைச்சர்.

அட்டவணை

| கட்டளையிட்ட திகதி | கட்டளையிடுவதற்கு யாரால் அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்குச் சேர்மதியானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரிக்கப்பட்டது. |
|---|---|---|---|
| 20.12.1961 | .. உப விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) கண்டியும் நுவரெலியா வட்டாரத்தின் உடகேவகட்ட பிரிவும் | உப உணவுப் பொருட்கள் .. | 27.12.61 ம் திகதியைக் கொண்ட 12,835 ம் இலக்கம் |
| 20.12.1961 | .. உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) இரத்தினபுரி வட்டாரம் | அரிசி .. | 27.12.61 ம் திகதியைக் கொண்ட 12,835 ம் இலக்கம் |
| 18.12.1961 | .. உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) அம்பாறை வட்டாரம் | உப உணவுப் பொருட்கள் (மாசிக் கருவாடு பொனிற்டோ மீன்) | 27.12.61 ம் திகதியைக் கொண்ட 12,835 ம் இலக்கம் |
| 29.12.1961 | .. உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) அம்பாறை வட்டாரம் | சீனி .. | 3.1.62 ம் திகதியைக் கொண்ட 12,843 ம் இலக்கம் |
| 4.12.1961 | .. உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) பதுளை வட்டாரம் | சீனி (பழுப்புச் சீனியும், வெள்ளைச் சீனியும்) | 6.1.62 ம் திகதியைக் கொண்ட 12,848 ம் இலக்கம் |
| 4.12.1961 | .. உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) மொனரக்கல வட்டாரம் | சீனி (பழுப்புச் சீனியும், வெள்ளைச் சீனியும்) .. | 6.1.62 ம் திகதியைக் கொண்ட 12,848 ம் இலக்கம் |
| 3.2.1962 | .. உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) மாத்தளை வட்டாரம் | வெள்ளைச் சீனி .. | 7.2.62 ம் திகதியைக் கொண்ட 12,898 ம் இலக்கம் |

3–546.

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### விளம்பரம்

1961 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ம் திகதியில் வெளியான 12,291 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில், 1957 ம் ஆண்டில் 33 ம் இல. உபபிரிவு 4, உட்பிரிவு 1, (அத்தியாயம் 327) தொற்று நோய் (கால்நடைகள்) த் திருத்தச் சட்டத்திற்கமைய, வடமாகாணம் வவுனியா மாவட்டத்தில், வவுனியா தெற்கு (தமிழ்ப் பிரிவில் செட்டிகுளம் என்னும் கிராமத்தில் இருந்ததாகப் பிரகடனம் செய்யப்பட்ட " தொண்டையடைப்பான் " என்னும் தொற்று நோய் தற்பொழுது முற்றாக அற்றுவிட்டதென்பதை இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

இப்பிரகடனம் ஈண்டு பொறிக்கப்பட்ட திகதியிலிருந்து செயல் முறைக்குவரும்.

ஆரியதாச அமரசிங்க,
பிரதம அரச மிருக வைத்தியர்.

பேராதனை, 12.3.62.

3–643.

### விளம்பரம்

1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க " தொற்று நோய்கள் " (விலங்குகள்) பிரமாணத் திருத்தச்சட்டம் (அத்தியாயம் 327) ; உட்பிரிவு 4, உபபிரிவு (1) ன் விதிகளுக்கமைய 12–1–62 ல் வெளியான 12,875 இலக்க வர்த்தமானியில், திரிகோணமலை தம்பலகாமம் பகுதி ருஜஎல–கந்தளாய் பிரிவில் இருந்ததாகப் பிரகடனப் படுத்தப்பட்ட " தொண்டை அடைப்பான் " என்னும் தொற்றுநோய் அங்கு தற்பொழுது அற்றுவிட்ட தென்பதை இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

இப்பிரகடனம் ஈண்டுபொறிக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து செயல் முறைக்குவரும்.

ஆரியதாச அமரசிங்க,
அரச பிரதம மிருக வைத்தியர்.

அரச பிரதம மிருக வைத்தியர் கரைரி,
பேராதனை, 1962–3–17.

3–645.

---

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.